38

உ

கணபதி துணை.

REGISTRAR O...
8 - APR 1915
MADRAS.

# திருவாரூர் ஸ்ரீ தியாக்நாயகன் தோத்திர விருத்தம்.

இஃது

திருப்பணிப்பேட்டை

கா. தொ. சுப்பா முதலியாரால்

இயற்றப்பெற்று

திருவாரூர்

"எட்வர்ட் அச்சுக்கூடத்திற்"

பதிப்பிக்கப்பெற்றது.

...பங்குனி-மீ 1௨

O2:3:38.21195TR
M15
171899

உ

கணபதி துணை.

# திருவாரூர் ஸ்ரீ தியாகநாயகன் தோத்திர விருத்தம்.

OFFICE OF THE REGISTRAR O... 8 - APR 1915 MADRAS.

## விநாயகர்—காப்பு.

திங்கடோய் கனகக் கடிமதி லாரூர்த்
திருநகர்த் தியாகநா யகனை
யெங்கடே வனுக்கின் றேழையா மடியே
னினியபா மாலைசூட் டிடவே
செங்கண்மா லுடலிற் சென்னிசேர்ந் துய்யச்
செய்தபுற் றிடத்துளா ரருளுந்
துங்கவா தாவிப் பிள்ளையார் கமலத்
துணையடி துணையதா மன்றே.

போற்றுநான் மறைசேர் செல்வவாரூரிற்
பொன்மணிச் சினகரத் தமரு
மேற்றுவா கனத்தெந் தியாகநா யகனை
யினிதுதோத் திரஞ்செயத் துணையா

மாற்றுண்மா டிட்டுக் குளத்து வன்றொண்ட
ரன்றெடுத் தையமெய் திடக்கண்
டேற்றுமாற் றுரைத்துக் காட்டுமைங் கரத்தோ
னிணையடிக் கனகவா ரிசமே.

**சுப்பிரமணியக்கடவுள்.**

திருமகளினிது தவஞ்செயு மாரூர்த்
திருநகர் விளங்குமா லயத்துண்
மருவுமெந் தியாக நாயக மணியை
மதியிலேன் றுதிசெய்தின் புறவே
பருவரை மகளா மல்லியங் கோதை
பாகன்வன் மீகநா தனுக்கோர்
குருவென வருளிச் சாமிநா தப்பேர்
கொண்டவேள் குரைகழல் காப்பே.

171899

**அவையடக்கம்.**

விண்ணுல கதனை வெறுத்துவிட் டமரர்
விழைந்துவந் தனுதினம் வணங்க
மண்ணுல கிதனை மதித்துவந் தளகை
மாநக ரெனவயங் காரூர்
நண்ணுநம் மிறைவன் றியாகநா யகனை
நாயினுங் கடையனேன் புகழ
வெண்ணுதல் சிறிய வெறும்புபாற் கடலை
யினிதுண நினைத்தலொத் திடுமே.

## நூல்.

வளங்கொள் விண்ணவன்மா றான்முகன் றனதன்
வாழ்வெலா நின்றிரு நாம
முளங்கனிந் துருகி யுரைக்குமெய் யடியா
ருறுஞ்சுகத் தணுவுநேர் படுமோ
களங்கமின் மனத்தோர் கண்டுகண் களிக்கக்
கவுரிவே ளுடனவ ரதம்
விளங்குபொற் சிங்கா தனத்தம ராரூர்
விடங்கனே தியாகநா யகனே. (1)

கமலமா முகம்வாய் பவளமாங் கயலாங்
கண்ணென மின்னனார் பின்போய்
ஞமலிபோ லலையுங் காளையர்க் காளாய்
நான்பணி புரிந்திடா தருளா
யமலனே விண்ணின் றிறைமுசு குந்த
னன்புடன் கொணர்ந்தருச் சிக்கும்
விமலனே நிறைசெல் வத்திரு வாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (2)

சோதினன் னெறியிற் புந்தியைச் செலுத்துங்
குணமுளார்க் கேவல்செய் தொழுகேன்
போதின்மன் னயன்கைப் படாமனின் கமலப்
பொன்னடி நிழலடை குவனோ

171899

பாதிவல் லிரவிற் பரவையிற் றூது
பன்முறை சென்றதாட் கமலம்
வீதியின் மணக்கும் புகழ்பெறு மாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (3)

பூரியருடனூ ரியர்கல வியினிற்
புலையனே னுழன்றதும் போதுஞ்
சீரியருடனட் புற்றுநின் கழலைச்
சேரநல் வரமெனக் களிப்பாய்
பேரியங் காழித் தேர்கொள்வித் தகனே
பிறப்புட னிறப்பிலா தவனே
வேரியங் கழுநீர் மார்பனே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (4)

பயின்மனை மனைவி மகவுமா றெவாம்
பந்தசாகரத் திடையுழல் வேற்
கெயில்பொடி படுக்கு நின்பெரும் புகழ்கேட்
டின்புறு மன்புமுண் டாமோ
மயிலியற் குயின்மென் குரலயிற் கருங்கண்
மலைமக டழுவுசெம் புயனே
வெயில்விடும் வீர கட்கனே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (5)

அழுங்கும்வன் பன்றிக் குட்டிகட் கனையா
யளித்தநீ பிணியினு லுள்ளம்
புழுங்குமென் றுன்ப மறிந்துதீர்த் திலையேற்
புலையனேன் றனையெவர் புரப்பார்
தொழுஞ்செருத் துணைமூக் கரிந்திடக் கண்டுந்
துணைவிகை யையுங்கழற் சிங்கர்
விழும்படி தடிந்தங் கருள்பெறு மாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (6)

இடாதற நெறியிற் பொருளினை யேமாந்
திழந்துபின் சிவன்செய லாமென்
றடாதசொற் புகலு நிலையில்செல் வரையா
னடுத்திடா தென்றனை யடைவேன்
படாமுலை யுமைசெம்பாகனே முக்கட்
பகவனே தஞ்சமென் றவரை
விடாதருள் புரியு மிறைவனே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (7)

உற்றபோ தெங்கட் குறவெனப் பலபே
ருறுவர்கொண் டாடுவ ருத்த
மற்றபோ திகழ்வ ராதலா னின்று
ளன்றி மற்றொருதுணை யறியே

னற்றவர் பாணர்க் காகமா மதுரை
நகர்நெடு மறுகினில் விறகு
விற்றவா கற்றோர் புகழ்திரு வாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (8)

அருத்தமே கதியென் றருளிலார் சமய
மறிந்துபோய்க் குறையுரைத் திடினு
முருத்தநோக் குடன்யார் தள்ளுமென் பாரவ்
வுலுத்தரை யிரந்திடா தருளாய்
நிருத்தனே பவள நிறத்தனே தூவெண்
ணீற்றனே யேற்றனே சயில
விருத்தனே நிகரி லொருத்தனே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (9)

எதும்யான் பிறப்பஞ் சேனிறப் பதனுக்
கென்கட வேனென வெந்தை
வாதவூ ரடிக டாமுமோ திடினவ்
வாதனைக் கென்செய்வே னருளாய்
தாதுலா மிதழித் தார்புனை புயத்தெந்
தலைவனே மலைகொள்வில் லவனே
வேதநான் முகன்மால் பரவுதென் னாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (10)

ஆழிவாய்த் துயிலு மாறிருப் பதமு
மம்புயன் பதமும்வான் பதமும்
பாழிவா யரவ முமிழ்விட பானம்
பண்ணுநின் பதாம்புயந் தருமே
காழிவாய் வருமெந் தைக்குநற் றனப்பால்
கவின்கொள்வள் ளத்தினி தளிக்கும்
வீழிவா யுமையாள் கணவனே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (11)

கடையரிற் கடையேன் புலையரிற் புலையேன்
கயவரிற் கயவனே னினக்கன்
புடையவர்க் கடியார் பணித்தகுற் றேவ
லுரிமையாய்ப் புரியுநா ளென்றோ
படையயிற் குமரன் பனைக்கைம்மா முகவன்
பரவுமெம் பரமனே விருதா
விடையுயர்த் தவனே கடிகொடென் னாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (12)

பகிர்மதி நுதலார் வாள்விழி வலையிற்
பட்டரா வல்சூல்வீழ் வதுவே
சுகிர்தமென் றலையும் புலையனு மடியேன்
சூழ்வினை மாய்வதெவ் விதமே

யுகிர்கொடு நளினு தனத்தனைந் தலையி
லொன்றெடுத் தொருகைவைத் தேற்கும்
விகிர்தனே யசபா நடனனே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (13)

நண்புடனமச்சி வாயவென் றுனது
நாமநன் குச்சரித் திறைஞ்சும்
பண்பிலா வென்னை யேன்படைத் தானப்
பங்கயன் செங்கைநொந் திடவே
விண்புன லிதழி தும்பையார் கரந்தை
வில்வம்வெள் ளெருக்கறு கரவம்
வெண்பிறை யணியு முடியனே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (14)

இந்திரவின்மின் மொக்குளிவ் வாழ்வா
மெனநினைந் துனதுசந் நிதியில்
வந்திரு கரங்கள் சென்னியிற் குவித்தே
வழுத்துநற் பேறெனக்குள்தோ
தந்திமுப் புரமந் தகனயன் றருமன்
சலந்தரன் றக்கனைங் கணைவேள்
வெந்திற லழிக்கும் வீரனே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (15)

இரதமார் மொழியார் வயத்தனா யவர் குற்
றேவல்செய் துழன்றிடா தடியேன்
கரதலா மலகம் போலநின் னழகைக்
கண்டுளங் களிக்குநா ளுளதோ
வரதனே வசந்த மண்டபத் தினிது
வந்தமர்ந் தருள்செய் வானவனே
விரதமா தவர்கள் சூழ்திரு வாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (16)

அங்கணிவ் வுலகஞ் செய்தநற் றவத்தா
லமரர்நா டகன்றிவ ணுள்ளார்
தங்கணீள் வினைதீர்த் தருளவந் தமருந்
தன்மையைப் புன்மையே னறியேன்
செங்கண்மான் மார்பி லினிதுவீற் றிருக்குஞ்
செல்வனே புரம்பொடி படவே
வெங்கணை தொடுக்குந் தீரனே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (17)

ஒண்மணி முறுவ லாந்துவர் வாயா
முனக்குமற் றெனக்குநீயிரண்டு
கண்மணி யெனவே பிறன்மனை விரும்புங்
கைதவ னுய்வகை யுளதோ

பெண்மணி யுமையோர் பாதிமே னியனே
பிரமன்மாற் கரியனே வில்லா
விண்மணி சூழும் வெற்பனே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (18)

பண்டயன் முதலோர் கண்டுளே நடுங்கும்
படியடர் கடல்விட மதனை
யுண்டருள் புரியு மொருவனென் றன்பா
லுற்றனன் குற்ற நீ பொறுத்தா
ளண்டர்கோன் விதித்த நாடொறும் வந்திங்
கருச்சனை புரியுமம் மானே
வெண்டலை மாலையுடையனே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (19)

வறியனேன் கொடிய பிணியினுலரவின்
வாய்ப்படுந் தேரையா யின்னின்
றறிகிலாய் போனீ யிரங்கிலா யெனின் மற்
ருரெனக் கிரங்குவா ரருளாய்
மறிமழுக்கரனே யரவகங் கணனே
மாறினின் ருடுமங் கணனே
வெறிகமழ் கழுநீர்த் தொடையனே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (20)

வலையினிற் படுமான் கன்றென விளியா
வன்பிணி யான்மனங் கலங்கும்
புலையனு மென்னைப் புரந்திடி லெவர் நின்
பொன்னருட் கிழிவெனப் புகல்வார்
நிலையனே மறையின் றலையனே கதியா
நிதியனே மதுரைமா நகரில்
விலையின்மா ணிக்கம் விற்றவா வாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (21)

என்னுறு வறுமை யேதுவா வள்ள
லென்றுசெல் வச்செருக் குடையார்
பின்னுறு துன்சந் நிதியுறு மடியார்
பின்னுறும் பெருமையென் றடைவேன்
கொன்னுனை வேற்கைக் கந்தனை மடிமேற்
கொண்டுமை யுடன்மகிழ் கோவே
வின்னுதன் மின்னார் நடம்புரி யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (22)

புழுவினு ணிரம்பும் புன்புலா லுடலோர்
பொருளெனப் புனைந்துகா முகர்பின்
கழுதைபோ லலையும் புலையனேற் கந்த
காலநற் கதியுமுண் டாமோ

தொழுதுவாழ் விறன்மிண் டரைத்திருத் தொண்டத்
தொகையைவன் றொண்டர்செய்திறைஞ்ச
விழுமிதாமேது வாக்குநல் லாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (23)

கண்டுசொற் கழியு மென்றுபெண் டிருக்கே
காதல்கொண் டிடுமெனக் கல்வி
லண்டருக் கேன்று மரியநின் பதமா
மம்புய மரும்புநா ளுளதோ
தொண்டருக் கெளியாய் பொன்மணி மாடந்
தொறுநெடு விசும்புற வோங்கும்
வெண்டுகிற் கொடிக ளுடங்கிடு மாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (24)

பொம்மல்வெம் முலைமா தரைப் புணர்வதுவே
புகன்றபே ரின்பென மகிழு
மம்மர்கொண் மனத்தார் தம்மையான் சேரா
வகையெனக் கொருவர மருளாய்
மும்மணிக்கோவை சேரமான் பெருமாண்
மொழிந்திடச் சிரமசைத் தவனே
வெம்மத யானை திரிதெரு வாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (25)

கரும்பினு மினிய மொழியுமை மாதுங்
　　கதிர்வடி வேலனு நீயு
மிரும்பினும் வலிய வென்மனத் துள்ளே
　　யினிதுவீற் றிருக்குநா ளுளதோ
சுரும்பிவர் மாலைத் தோண்முசு குந்தன்
　　சோமவா ரந்தொறும் பாவி
விரும்பியர்ச் சனைசெய் தருள்பெறு மாரூர்
　　விடங்கனே தியாகநா யகனே. (26)

நோயுறுஞ் சிறியே னுயினுங் கடையே
　　னெந்தனன் வினையினு லெனினுந்
தாயுறுங் கருணை வைத்தெனை யாளத்
　　தகாதுகொ றயாபர னன்றோ
பேயுறுஞ் சுடலை யரங்கென வாடும்
　　பித்தனே முத்தொழி லினனே
வேயுறுந் தோளி பங்கனே யாரூர்
　　விடங்கனே தியாகநா யகனே. (27)

போதில்வா ழயற்கென் பிழைபுரிந் தேனின்
　　பொற்பதம் வணங்குநற் றலைபு
மோதுநன் னுவுங் காணுநற் கண்ணு
　　முறவெனக் கேன்படைத் திலனே

யாத்திரை நாளம் முனிவர்நின் வலத்தா
ளன்புடன் காணநன் கருள்வாய்
வேதியர் வேத வொலிமிகு மாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (28)

கடற்படி மீதுற் பவித்தது முதலிக்
காயமுள் ளளவும்வன் பிணியா
லிடர்ப்பட விடுத்தா யிருக்கிலெற் கிழிவா
மிறக்கினிற் குறும்பழி யறிவா
யடற்கரு முதலை யுண்டபிள் ளையினை
யாவியோ டங்கயக் கரையில்
விடற்கருள் புரிந்தோ னெதிர்தொழு மாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (29)

அவ்விய முடையே னறநெறி யறியே
னன்பருக் கேவல்செய் தொழுகேன்
செவ்விய நின்று ணிணையிலே னெனினுஞ்
சித்தம்வைத் தாள்வதுன் பரமே
யிவ்விய னுலகை யெண்ணிரண் டாண்டாரன்
டிறைமகன் றனைப்புரந் தவனே
வெவ்விய கால காலனே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (30)

171899
600 008

எண்ணருஞ் சனனமெடுத் தெடுத் துழன்று
மின்னுமிவ் வாழ்வினை விரும்பிப்
பண்ணமர் மொழியார் தீநெறி யொழுகும்
பாவியே னுய்யுமா றுள்தோ
மண்ணவ ரொருங்கே வடம்பிடித் திழுக்க
மணிநெடுந் தேர்மிசைப் பவனி
விண்ணவர் மலர்பெய் திடவரு மாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (31)

நாள்வினை கொடிய கோள்கரும் பகட்டி
னண்ணும்வெங் கூற்றுநின் சமலத்
தாள்விழைந் திறைஞ்சி யேத்துமெய் யடியார்
தம்மையு நலியுமோ புகலாய்
வாள்விழி யுமைசேய் கணத்தொடு மறைவாய்
வந்துசோ மாசிமா றன்செய்
வேள்வியி லவியேற் றுனுறு மாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (32)

Q23:58:2195 ; 145

பழவினை யதனாற் பிறவியாங் கடலிற்
படரிடர்த் திரையினான் மொத்துண்
டுழலுமா பாவிக் குனதுசே வடியா
மொருபுணை யிட்டுமோ வுரையாய்

மழவிடை யுடையாய் மதிநதி முடியாய்
மான்மழு வேந்துசெங் கையாய்
விழவறு மறுகு சூழ்திரு வாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (33)

இருப்பது பொய்போ வதுவுமெய் யென்னு
மெந்தையா ரருண்மொழி தேறே
னெருப்பிடு முடலை நிலையெனு துன்று
ணினைந்துள னெக்குரு குவனோ
கருப்புவில் லவனைக் காய்ந்திடு நெற்றிக்
கண்ணனே கண்ணன்மைத் துனனே
விருப்பொடு வெறுப்பற் றவர்புக ழாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (34)

இன்றிலை யொருவ னெருநலுள் ளானென்
றிசைத்தவத் திருக்குற ளோர்ந்தே
பொன்றிடு முடலென் றுன்றிரு நாமம்
போற்றுவார் வினையைமாற் றுவரே
யன்றிளங் குமரன் றன்னைவன் றேர்க்கா
லதனில்வைத் தூர்ந்தசோ ழனுக்கு
வென்றிவெள் விடைமேல் வந்தரு ளாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (35)

எரிவிளக் கொளியில் வீழ்ந்திடும் விட்டி
லென்னவே மின்னிடை வாட்கண்
புரிகுழன் மடவார் கலவியில் வீழும்
புலையனே னலமுமெய் துவனோ
பரிகரி தேர்பல் லியவித வொலியும்
பன்மறை யொலியுமே பெருகி
விரிகட லொலியை யடக்கிடு மாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (36)

அன்றுநல்லூரி னுவினுக் கரசை
யாண்டவா றன்பிலா வெனையு
மின்றுவந் தாண்டா லிதுதகா தருளுக்
கென்றனை முனிபவ ருளரோ
சென்றுகுன் றெடுத்தோன் றேளிற மிதிக்குந்
தேவனே யைம்புலன் களையும்
வென்றுளார்க் கின்பவீடரு ளாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (37)

பிறன்மனைபுகாமை யறமென வவ்வை
பேசுமம் மொழிவழி யொழுகுந்
திறமிலேன் றூர்த்தர் நட்பையே விரும்புஞ்
சிறியனேன் பிறவிநோ யறுமோ

குறமகள் வள்ளி மாமனே மலையாள்
கொண்கனே யெண்குணத் தவனே
விறல்கொள்கைம் மாவி னுரியனே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (38)

புத்தலர் புனைந்துன் பொன்னடிக் கன்பு
பூண்டெழுத் தைந்துமுச் சரிக்கு
முத்தம ரின்ப முறுவர்மற் றென்போ
லுழலுவார் துன்பமே யுறுவா
ரத்தர்வன் றொண்ட ரப்பர்சம் பந்த
ரருள்செய்மா ணிக்கவா சகராம்
வித்தகர் நால்வர் புகழ்திரு வாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (39)

அருந்தவ முடையோ ரடையும்விண் ணுலகை
யகன்று மண் ணுலகினீ யெளிவந்
திருந்ததை யறிந்தும் பணிந்துனைப் பாடி
யேத்துமப் புண்ணிய மிலனே
முருந்தணி மூரற்றுவரிதழ் மதிவாண்
முகநக நங்கைபங் கினனே
விருந்தரு மனைகள் பொருந்துநல் லாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (40)

அத்தமும் வாழ்வு மகத்துமட் டென்னு
மன்பர்சொற் றெளிகிலா நாயே
னித்தரை மீதுன் னன்பருக் கன்பா
யேவல்செய் தின்பமெய் துவனோ
கத்தனே யெறிபத் தரையவர் தொண்டு
கண்டுளங் களித்தவா முத்தி
வித்தனே யட்ட மூர்த்தியே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (41)

இப்பொழு துன்பா லுண்டொர்விண் ணப்ப
மின்னுமிப் பிறவிநோ யடையா
தெப்பொழு தின்பு மெய்துமா றெனக்கோ
ரினியநற் குருவென வருவாய்
மைப்பொழில் சூழுஞ் சண்பைமன் னவரான்
மானியார் மகிழ்நெடு மாறன்
வெப்பொழி வித்தாட் கொண்டிடு மாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (42)

அளியனீ யென்றுன் சந்நிதி யடைந்தே
னறிவில னன்பிலன் கயவ
னெளியனுத் திகன்கா முகன்பிணி யுளனென்
றென்பிழை குறித்திடா தருள்வா

யொளிமிகுங் கனக மன்றுணின் றாடு
மொருவனே புவிபுன லனல்கால்
வெளியுமா னவனே வளமலி யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (43)

அரகர சம்போ சங்கர சிவவென்
றனவர தமுநினைத் துதிக்கும்
வரமெனக் கென்னாள் வாய்க்குமந் நாளிம்
மாயவாழ் வடைந்திடா துய்வேன்
பரவைவன் றொண்டர் களிக்கநெற் குவையூர்ப்
பரப்பெலா நிரம்பவன் பூதம்
விரைவுடன் கொணர்ந்தன் றிடச்செயு மாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (44)

பழுதில்பன் மலர்க வேநின் பாத
பங்கயம் பணிந்துள முருகு
மொழிவின்மெய் யன்பே யுடையவர்க் கல்லா
லுன்னருண் மற்றவர்க் குளதோ
தொழுதழுந் தண்டி யடிகளுக் கிரங்கித்
துலங்கிரு விழிகொடுத் தமணர்
விழிகெடுத் தழுங்கப் புரிந்திடு மாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (45)

ஏர்கொள்பொன் னிறச்செவ் வந்தியின் றேடோ
டினியதேன் மணங்கொள்செங் கழுநீர்த்
தார்களித் தணியு நின்றிரு வழகைத்
தமியனேன் காணவல் லவனோ
சீர்கொள்பங் குனியுத் திரத்தினிற் றேவ
தீர்த்தநன் காடுவார் வினையை
வேர்களைந் தாளு மீசனே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (46)

சங்கர சம்போ சதாசிவ பகவ
சச்சிதா னந்தமுக் கண்ண
வங்கண கங்கா தரபர வரவென்
றடியனேன் பரவவென் றருள்வாய்
நங்கண மாரூர்ப் பிறந்தவ ரெல்லா
நன்றுகா ணென்னமி நந்தி
வெங்கதி ரெழுமுன் வரவரு ளாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (47)

உறவினர் செம்பொற் றீவரா யினுஞ்சிற்
றுமியுமீ வதற்குள மிசையா
ரறவனு நின்றுள் சேமமு நட்பு
மாமெனக் கின்னருள் புரிவாய்

குறமினு டெய்வ யானைசேர் புயத்தெங்்
குமரவேள் கவுரியோ டமர்வாய்
விறல்கொள்வேங் கையின்ரே லுடையனே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (48)

ஈண்டவா வில்லார்க் கில்லையாந் துன்ப
மென்றதுய் வழியென வறியேன்
மாண்டுவா யங்கா வாமுனின் னும
மனமகிழ்ந் தினிதுசொல் லுவனே
வாண்டவா தில்லை வாழுமந் தணர்த
மடியவர்க் கடியனென் றெடுத்து
வேண்டுமா ரூரர்க் குலைத்தவா வாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (49)

தஞ்சமென் றன்சந் நிதியடைந் தேனென்
றவறெலாந் தவறிடா தெண்ணி
யஞ்சலென் றுளத் தகாதவ னியனென்
றன்பர்நிற் குரைக்கினென் செய்வேன்
சஞ்சல மின்றி மிடறரிந் திடுமா
தவர்கலி யரைப்பிடித் தாண்டாய்
வெஞ்சலந் தரனை முனிந்தவா வாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (50)

பதுமன்மா தவனென் றிருவரு மாறு
பட்டியாம் பாம்பர மென்னுங்
குதுகுதுப் படங்கத் தழற்பிழம் புருவங்
கொண்டநின் பெருமையா ரறிவார்
வதுவைநா ளொருபெண் கூந்தலீர்ந் தளிக்கு
மானக்கஞ் சாறருக் குரியாய்
விதுரன்வீட் டினிதுற் றவன்றெழு மாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (51)

அளக்கரி னலைபோ லளவில்பல் சனன
மடைந்தடைந் தழுங்கும்வல் வினையே
னுளக்கவ லையினை யொழித்தரு ளடியே
னுன்னடைக் கலமினி விடுக்கேல்
துளக்கமின் மனத்த ராய்நமி நந்தி
தாயநீ ரகன்றெறும் வார்த்து
விளக்கெரித் திடுமோ் றருளுநல் லாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (52)

வாசவற் கிடர்செய் யசுரரைத் தொலைத்திம்
மாநிலத் துனைக் கொணர்ந் திறைஞ்சுஞ்
தேசுறு முசுகுந் தன்செயுந் தவம்போற்
சிறந்தநற் றவமெவ ருடையா

ராசினற் பூசை புரியுமார்க் கண்ட
ராருயிர் பிடிக்கவன் பாசம்
வீசுமந் தகனை யுதைத்தவா வாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (53)

ஒருமல ரெடுத்திட் டொருதிரு நாம
முரைத்தொரு தரம்பணிந் தவர்க்கு
மிருவினை யறுக்குங் கருணையங் கடலென்
றெண்ணிலேன் மண்ணிலேன் பிறந்தேன்
றருகென மனைவி தனையியற் பகையார்
தந்துபின் றுணைவர மகிழ்ந்தே
விருடவாகனமீ தெழுந்தரு ளாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (54)

கூற்றிருஞ் செங்கட் கடாவினிற் பாசங்
கொண்டடி யேன்முனம் வருமுன்
வேற்றிரு முருக வேளுமை யுடன்மால்
விடையில்வந் தஞ்சலென் றுள்வாய்
பாற்றிரு நீற்றெம் பரமனே மணிகள்
பதித்தசிம் மாசனத் தினிது
வீற்றிருந் தருளு முதல்வனே யாரூர்
விடங்கனே தியாகநா யகனே. (55)

முற்றிற்று.

171899